[23rd March 1961

(இ) மேற்படி குறையைப் போக்க உடனடியாக ரோடு போட உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The hon. Member himself has made a representation to the Government in the matter.

(*b*) The matter is under the consideration of the Government.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த அரவட்லா மலையின் மீது மூன்று கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 1,500 மக்கள் வசிக்கிறார்கள். 100 வருஷங்களுக்கு முன்னால் "க்லோஷர் எரியா" என்கிற முறையில் அது இருந்தது. ஆனால் சமீபத்தில் காடு கண்டிராக்டர் அவருடைய லாபத்தை உத்தேசித்து லாரி போகக் கூடிய அளவுக்கு மலையை உடைத்து ரோடு போட்டிருக்கிறார்கள். அந்த ரோடுக்கு மெட்டல் போட்டு வசதி செய்து கொடுத்தால் போக்குவரத்திற்குச் சௌகரியமாக இருக்கும். மக்களுக்குத தேவையான பொருள்களைக் கொண்டு செல்லுவதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அதைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : காட்டு இலாகா ரோடு போட்டிருக்கிறார்கள். தேவைக்கு எவ்வளவு வேண்டுமோ அந்த முறையில் போட்டிருக்கிறார்கள். மெட்டல் போடவில்லை. ஆனால், இதற்கு மெட்டல் போட வேண்டுமானால் ரூ. 1½ லட்சம் செலவாகிறது. ஆகையால், மராமத்து இலாகாவுடன் கலந்து ஆலோசித்து, அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். அந்த ரோடு எல்லோருக்கும் உபயோகப் படவேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். அதைப்பற்றி காட்டு இலாகாவுக்கு ஆட்சேபணை இராது. எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : சென்ற இரண்டு வருஷ காலமாக மராமத்து இலாகா காட்டு இலாகாவைக் காட்டுகிறது. காட்டு இலாகா மராமத்து இலாகாவைக் காட்டுகிறது. அந்த அளவுக்குத் தான் நிலைமை இருந்து வருகிறது. இ ண்டு ஆட்டில் ஊட்டிய குட்டியைப் போல இம்மாதிரி ரோடு வசதி போதுமான அளவுக்கு இல்லாமல் அவஸ்தையாக இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள், இ ண்டு பேர்களும் கூடி யோசனை செய்து இதைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வர்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டு ஆட்டில் ஊட்டிய குட்டி என்று பழமொழி சொல்லுவதற்காக கனம் அங்கத்தினர் இப்படிச் சொல்லவேண்டாம். அப்படி ஒன்றும் தகராறு இல்லை. நான் முன்பே இதை விளக்கினேன். இதற்கு அதிகச் செலவாகிறது. மராமத்து இலாகா ஏற்றுக் கொள்ளவேண்டும். 1½ லட்ச ரூபாய் செலவு செய்வதென்றால் உடனடியாக எடுத்துக்கொண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிட முடியாது. இதிலே வேண்டிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தகராறு ஒன்றும் இல்லை.

Pests (paddy crops)

* 1014 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether any study and research has been made over the causes and prevention of pests to paddy crops in Lalgudi taluk which is being regularly affected for the past five or six years?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No separate study and research of the type mentioned have been made in the Lalgudi area as pests occur wherever paddy is cultivated and as there is nothing peculiar about this area.